## ★ உதவி வழங்கும் நாடுகள் அரசுக்கு நெருக்கடி

[கொழும்பு]
இனப் பிரச்சனையை தீர்க்குமாறும், மனிதஉரிமைகளை மதிக்குமாறும் இலங்கை அரசை இலங்கைக்கு உதவி வழங்கும்நாடுகள் தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று

[3-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 30 இதழ்: 185
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-8-1991

### மரணப்பொறி
## 3 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)
அம்பாறை மாவட்டத்தில் புலிகள் வைத்த 'மரணப் பொறி' ஒன்றில் சிக்கி 3 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

### நுவரெலியாவில்
## 19 வீடுகள் தீக்கிரை

[கொழும்பு]
நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பட்டிப்பொல விவசாய கிராமத்தில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் 19 வீடுகள் எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளன.

(2-ம் பக்கம் பார்க்க]

# வடக்கு கிழக்கில் யுத்தநிறுத்தம் ஏற்படுத்த
# மேற்குலக நாடுகள் முயற்சி?

## அரசு தரப்புடன் பேச்சு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் அரசுப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் மேற்குலக நாடுகள் ஈடுபட்டுள்ளன. இது குறித்து இந்த நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்திவருகின்றார்கள்.

இப்பேச்சுக்களில் கடந்த சில தினங்களாக மேற்கு நாட்டு தூதரக அதிகாரிகள் பலர் அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். தொடர்ந்தும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த முயற்சிக்கு அரசுதரப்பிலிருந்து சாதகமான பதிலெதுவும் கிடைக்கும் பட்சத்தில் இவர்கள்விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொள்வார்களென எதிர் பார்க்கப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு முன் அரசு தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென ஐக்குழுவின் பிரதிநிதிகள் எதிர்பார்ப்பதாகவும் கொழும்புச் செய்திஒன்றுதெரிவித்துள்ளது.

மேலும் பாராளுமன்றதெரிவுக் குழுவை நவசமசமாஜக் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### ஜனாதிபதி முறையை நீக்கும்வரை
## அரசியலிலிருந்து விலகேன்

(கொழும்பு)
நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி பதவி முறையை நீக்கி நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் கிடைக்கச் செய்த பின்பே அரசியலிலிருந்து ஓய்வு பெறுவேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சூளுரைத்துள்ளார். இது தொடர்பாக

[3-ம் பக்கம் பார்க்க]

## மேஜர் உடுகம்பொல பொலிஸிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)
வெளிநாட்டிலிருந்து தங்கப் பாளங்களைக் கடத்திய இராணுவ மேஜர் உடுகம்பொல அபராதம் செலுத்தத்தவறியதையடுத்து பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர், சிங்களவர் முஸ்லிமாக மாற்றம்

(கொழும்பு)
தென் பகுதியிலும், மலையகத்திலும், கிழக்கு மாகாணத்திலும் பல இந்துக்களும், பௌத்தர்களும் இஸ்லாம் மதத்திற்கு மாறியுள்ளனர்.

அக்கரைப்பற்றில் இரு சிங்களவரும், பதுளையில் ஒரு தமிழ் இளைஞனும், யுவதியும் மற்றொரு சிங்களவரும் கொழும்பு கொம்பனி தெரு பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 இந்துக்களும் இரு சிங்களவரும் இவ்வாறு முஸ்லிம்களாக மாறியுள்ளனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

### யாழ்.பல்கலைக்கழகத்துக்கு
## மாணவர் அதிகரிப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)
தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் 1990-91 கல்வியாண்டில் ஏற்பட்ட மாணவர் அதிகரிப்பைப் போன்று யாழ். பல்கலைக்கழ

(3ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க தூதர்
## ஹமீத் சந்திப்பு

[கொழும்பு]
இலங்கைக்கான அமெரிக்க தூதர் திரு. மரியன் கிரீக்முக் அமைச்சர் ஹமீத்தை சந்தித்து முக்கிய பேச்சுக்கள் நடாத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

### உ. அ. அதிபர் பிரிவுகளை
### வடக்கு-கிழக்கில் புதிதாக
## அமைக்க தடை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதிதாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அமைப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது.

பொது நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அமைச்சுக்கு, சிரேஷ்ட அதிகாரிகள்

[2ம் பக்கம் பார்க்க]

## சிங்கள கிராமவாசிகளுக்கு ஆயுதம், வெடி மருந்து விநியோகம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அரசு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் பெருமளவில் வழங்கியுள்ளது.

மதுரங்கல, மலிந்த, களங்கவில, அசெல்லபுர, முத்துவெல, கடுவத்தமடு போன்ற மகாவலி குடியேற்றவாசிகளுக்கே கடந்த சில தினங்களுக்குமுன்

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ தலைமைப்பீடத்தில் விரைவில் பல மாற்றங்கள்

(கொழும்பு)
இலங்கை இராணுவத் தலைமைப் பீடத்தில் விரைவில் பல மாற்றங்கள் நடைபெறவுள்ளது.

இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்காவுக்கு கூட்டுப் பண்டத் தலைமையகத்தில் சிரேஷ்ட தலைமைப் பதவி வழங்கப்படவுள்ளது

இதனால் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண அல்லது மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ நியமிக்கப்படுவார் எனத் தெரிய வருகிறது.

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ வடபகுதியில் பல இராணுவ நடவடிக்கைகளை முன்

(4ம் பக்கம் பார்க்க)

### யாழ். ஆசன கோயிலில்
### ஒரு லட்சம் ரூபா
## நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஆசனக் கோயிலில் நேற்றுமுன்தினம் இரவு துணிகரக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ 1497)

## சோதிடம்

குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் பெயர் சூட்ட கிரக தோஷங்களுக்கு இயந்திரங்கள் செய்து தர, ஜாதகம் எழுத, திருமணப்பொருத்தம் பார்க்க, எதிர்காலப் பலாபலன்கள் அறிய V. A. சிவராசா, 152B. அரசடி ரோட், கந்தர்மடம் [சி-5113]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-09-20ம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

கணிதமும் புள்ளி விவரவியலும் /விலங்கியல் – சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்

**சம்பள அளவுத்திட்டம்:**

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 - ரூபா: 9,600 - 8X250 - 11,600/- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 - ரூபா: 8,000 - 5X250 - 9,250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர் ரூபா: 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பபடிவங்களுக்கானவேண்டுகோளுடன்சுயமுகவரியிட்டு ரூபா1-50முத்திரையொட்டப்பட்ட 23X10 ச மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-08-09.

(எ-1496)

## சோயா அவரை

சோயா அவரை தொகையாகவோ சில்லறையாகவோ கொள்வனவு செய்யப்படும். அண்ணு தொழிலகம், இணுவில். (எ 1499)

## வியாழ மாற்றம்

(14-8-91) வியாழமாற்றமும், (22-8-91) செவ்வாய் மாற்றமும் எல்லா ராசிகளின் பலன்களும் புதிய வெளியீடு ரூ. 6/50 எங்கும் கிடைக்கும், ரகுநாதன் பதிப்பகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof:- சத்தியதாசன், ஞானம்ஸ். சித்தன் கேணி. (சி-5112)

## நல்லூரில் மீரா நாவல்

பரிசளிக்கக்கூடியவை இனவிடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள், சிறுவர்களுக்கு "இராவணன் கோட்டை" இன்னும் உயிரோட்டமான பத்து "மீரா நாவல்களும்" விற்பனையாகின்றது. [சி-5114]

## அதிஷ்டம் அழைக்கின்றது

தீராத கடன்தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகத்தடை, தெய்வசாபம், குருசாபம், நாகசாபம் போன்றவை நீங்கி அதிஷ்டத்துடன் வாழ வழிகாட்டுகின்றோம். நிவாரண யந்திரங்களும் நாலூறு கண்ணூறு யந்திரங்களும் வழங்குகின்றோம். நேரில் சாதகத்துடன் வரவும்: ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை ரோட், [அரசடிச் சந்தி] நல்லூர். (சி 5116)

## இராசி பலன்

15 - 08 - 1991
தமிழுக்கு ஆடி - 30
வியாழக்கிழமை

ஷஷ்டி பி. இ. 1-40 வரை. சித்திரை பாலை 6-48வரை. சித்தாமிர்தம்.

இராகுகாலம் பகல் 1-35 முதல் 3-05 வரை.

சுபநேரம் காலை 7-35முதல் 9-05 வரை.

மேடம்; தீவிரமான சிந்தனை. மகிழ்ச்சியான சூழ்நிலை. சரியான முடிவெடுத்தல்.

இடபம்: ஒத்துப்போகாமை பெண்மைக்குணம். மனவிரக்தி

மிதுனம்: நினைப்பது நடவாமை, முரட்டுத்தனம், வீண் வம்பு.

கடகம்; சிறு தொல்லை. திருமணப்பேச்சு, குடும்ப பெருமை.

சிங்கம்: எதிர் நீச்சல், பாபச்செயல், வாய்வுக் கோளாறு.

கன்னி: உதவியை உதாசீனம் செய்தல், பணவிடய மோதல். மனக்குமுறல்.

துலாம்: பெருமைக்குறைவு. நரம்புத் தளர்ச்சி. பிறர்துன்பம்

விருச்சிகம்: பாராட்டுக்கள். உணர்ச்சிவேகம். அதிர்ஷ்டம்.

தனுசு; பேச்சில் கடுமை வாழ்க்கைச்சுகம் மனக்குறை.

மகரம்: குடும்பப் பிணக்கு. அமைதி குலைதல். புத்திர சோகம்.

கும்பம்: தொழில்கஷ்டம். வருமானம்வீழ்ச்சி. கடும்பகை.

மீனம்: எதிர்பாராத உறவு குடும்ப சுகம். காரிய சித்தி.

- ஜோஸ்யர்

## நுவரெலியாவில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நீர் விநியோகம் சம்பந்தமாக ஏற்பட்ட சர்ச்சையில் கடந்த வாரம் மேற்படி கிராமத்தில் இரவு நேரம் ஒரு கோஷ்டியினர் புகுந்து நித்திரையில் இருந்த மக்களை வெளியே இழுத்து நையப் புடைத்ததுடன் அவர்களின் விவசாய உபகரணங்களை சேதப்படுத்தி வீடுகளுக்கும் தீவைத்து எரித்தனராம்

இதுசம்பந்தமாக 32 பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். (வி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1991 – 09 – 13 திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. புவியியல் / சமஸ்கிருதம்/அரச அறிவியியவில் உதவி விரிவுரையாளர்.

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

(துறைத்தலைவரினாலும்/பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை, விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை 4,500/- ரூபா 10X200 - 6,500 (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் இதர விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23X10 சதமமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியனவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-06-09

(எ-1495)

## யாழ்.ஆசனகோயிலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தேவாலயத்தில் தற்போது வருடாந்த திருநாள் நடைபெற்று வருகின்றது. இதனால் மரியன்னையின் திருச்சொரூபத்துக்கு நகைகள் அணிவது வழக்கம் தினமும் திருநாள் ஆராதனைகள் முடிவடைந்ததும் மாலையில் நகைகள் கழற்றப்பட்டு தேவாலயத்தினுள் இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு வருவது வழக்கம்.

மேற்படி தேவாலயத்தில் கொள்ளையிடப்பட்ட இரவு திருடர்கள் இந்த இரும்புப் பொட்டகத்தை உடைத்து அதற்குள் இருந்த 200 வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த நகைகளையும் தேவாலயத்தினுள் இருந்த உண்டியல்களையும் உடைத்து பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்.

கொள்ளையர்தேவாலயத்தில் ஆராதனைகள் நடைபெறும் வேளையில் பாவிக்கப்படும் பரிசுத்த பாத்திரங்களையும், ஆயர் குருமார் அணியும் ஆடைகளையும் சேதப்படுத்திச் சென்றுள்ளனர்.

## உ. அ. அதிபர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


அடங்கிய தெரிவுக் குழு, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புதிதாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் எதையும் அமைக்கவேண்டாம் என்று சிபாரிசு செய்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையின் பல பகுதிகளில் புதிதாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

மேற்படி திருட்டுச் சம்பவம் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பு தேவாலயத்தின் உள்அறைத்திறப்பு களவாடப்பட்டுள்ளதாகவும்கூறப் படுகின்றது.

இதேபோன்று திருட்டு முயற்சி ஒன்று யாழ். ஆயர் இல்லத்திலும் கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் திருடர்கள் கையில் பெறுமதிவாய்ந்த பொருட்கள் ஏதும் சிக்கவில்லையென்றும் கூறப்படுகிறது. (வி)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



கோபு [வெற்றிவேல் வசந்தன்]

| தாயின் மடியில்: | தாயக மடியில்: |
|---|---|
| 29 - 12 - 1974 | 16 - 07 - 1991 |

உன் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், உற்றூர், உறவினர்

சிவன் வீதி,
பன்னைக்கட்டை. பருத்தித்துறை. (சி 5121)

## 31-வது தின நினைவஞ்சலி



செல்வன் கணேஸ் (பப்பா)

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 13-06-1974 | 16-07-1991 |

மண்ணை மீட்பேன் அம்மா என்பாய்
மண்ணுக்கே இரையானாய் பப்பா!
சிந்தியகுருதி வீரமரணம் என்பாய்
விடுதலைக்கே உன்னுயிரை ஈந்தாய்!
என்றோ ஒருநாள் தமிழீழம்
மலருமென சத்தியம் உரைப்போமடா!
அன்பு மகனே.........
உன் ஆத்மா சாந்தியடையட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள்,
உற்றூர், உறவினர்கள்,
ஆ. ரமேஸ் குடும்பத்தார் (மானிப்பாய்)
மாமா பாஸ்கர் குடும்பத்தார்கள்,

112/12, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [சி-5115]

## ★ ஆனையிறவு இராணுவ முகாமில்

# ஒவ்வொரு வினடியும் புலிகளின் மோட்டார் குண்டினுல் பலஇடங்கள் தீப்பற்றி எரிந்தன

## - சார்ஜன் மேஜர் கொடமுன

[கொழும்பு]

''ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடும். இனி ஒவ்வொருவரது உயிரும் அவரவர் கைகளிலேயே தங்கியிருக்கிறது என்றதொரு நிலை ஒவ்வொரு சிப்பாய்க்கும் ஏற்பட்டது.''

இவ்வாறு ஆனையிறவு முகாம் முற்றுகையினுள் இருந்த இராணுவ மருத்துவப் பிரிவை சேர்ந்தசார்ஜன் மேஜர் கொடமுன 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

தாம்பட்ட இன்னல் குறித்தும் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்கள் குறித்தும் அவர் மேலும் கூறுகையில்;

யூலை 10 ம் திகதி இரவு புலிகள் விட்டுவிட்டு துப்பாக்கிச் சூட்டை நடாத்திய வண்ணமிருந்தனர். அன்று அதிகாலை சுமார் 3.50 மணியளவில்மிகப் பெரும் தாக்குதல் ஆரம்பமானது. மோட்டார் குண்டுகள் சகிதம் புலிகள் முகாமினை உக்கிரமாக தாக்கினர்.

### முகாம் அதிர்ந்தது

புலிகளின் மோட்டார் தாக்குதல் இடி முழக்கம் போல் மிகப் பெரிதாக ஒலித்துக் கொண்டிருந்தது இத்தாக்குதலால் முகாம் அதிர்ந்த வண்ணமிருந்தது எங்கும் ஒரே இடி முழக்க சத்தமும் கட்டிடங்கள் அதிரும் ஒலியுமே கேட்ட வண்ணமிருந்தது.

### ரொக்கட் குண்டுகள்

பயங்கர இருள் கவிந்திருந்ததால் அதனை மோட்டார் குண்டுகளும், துப்பாக்கிச் சூட்டு சன்னங்களுமே வெளிச்சப் படுத்திக் கொண்டிருந்தன. மோட்டார் குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தவண்ணமிருந்தன. இதனூடாக துப்பாக்கிச் சூடும் சரமாரியாயிருந்தது. ரொக்கட் குண்டுகள் வீழ்ந்து வெடிக்கும் போதெல்லாம் முகாம்பகுதியிலிருந்த காய்ந்த புல்லுகளும் மரங்களும் எரிந்த வண்ணமிருந்தன.

இதனல் துப்பாக்கிச் சூடும் கடும் தாக்குதலும் எந்த திசையிலிருந்து வருகிறது என்பதை அறியமுடியாதிருந்தது ஒவ்வொரு வினடியும் முகாமினுள் மோட்டார் குண்டுகள்வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தது கண்ணுக்கு தெரியாத எதிரியை நோக்கி படையினர் கண்டபடி சுட்டுக்கொண்டிருந்தனர்

### இரவில் வெளிச்சமில்லை

இரவு முழுவதும் வெளிச்சம் எதுவும் இல்லை. மோட்டார், ரொக்கட் குண்டுகள் வெடிக்கும் போதும் படையினர் சுடும் போதுமே முகாமினுள் ஒளி தெந்தது முகாம் முழுவதும் அதிர்ந்தவண்ணமிருந்தது.

கடும் போர் ஆரம்பித்து சில மணி நேரத்துள் முகாமின் இரண்டாவது தளபதி மேஜர் லலித் புத்ததாஸ உட்பட 11 படையினர் படுகாயமடைந்தனர். ஒருவர் கொல்லப்பட்டார்.

### வாகனத்தில் சென்றபோது...

முகாமினுள் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருக்கும் போது மோட்டார் குண்டு வீழ்ந்து வெடித்ததில் மேஜர் புத்ததாஸ படுகாயமடைந்தார். இவருடன் கூடச்சென்ற மற்றொருவர் கொல்லப்பட்டார். மேஜர் புத்ததாஸவிற்கு வயிற்றுப் பகுதியில் மிக மோசமான வெட்டுக்காயம் ஏற்பட்டிருந்தது.

## விமானம், ஹெலி நோக்கி புலிகள் தாக்குதல் நடத்தினர்

அந்த நேரத்தில் காயப்பட்ட படையினருக்கு மிகக் கடுமையாக சிகிச்சையளித்த வண்ணமிருந்தோம் எங்கள் கைமுழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையிலிருந்தது. மேஜர் புத்ததாஸ படுகாயமடைந்ததை கேள்வியுற்று அவர் வீழ்ந்து கிடந்த இடத்திற்கு நானும் மருத்துவப் பிரிவை சேர்ந்த மற்றும் நால்வரும் சென்றோம்.

மேஜர் புத்ததாஸவையும் மிக மோசமாக படுகாயமடைந்த மற்ற படையினரையும் ஹெலிகொப்டர் மூலம் வெளியேற்றுவதற்காக ஹெலி இறங்கி, ஏறும் இடத்திற்கு அருகில் கொண்டுவந்தோம்;

### புலிகள் கடும் தாக்குதல்

ஹெலிக்கு அவசர தகவல் தெரிவிக்கப்பட்டது. முகாமினுள் இறங்க ஹெலிகொப்டர் பல தடவை முயற்சித்தது. எனினும் புலிகளின் தொடர்ச்சியான கடும் தாக்குதலில் அது கைகூடவில்லை. சாதாரண இயந்திரத் துப்பாக்கிமூலம் ஹெலி கீழே இறங்குவதை அவர்கள்தொடர்ந்தும் தடுத்து விட்டனர். ஹெலியால் இறங்கமுடியாது போய்விடவே அந்த முயற்சி கைவிடப்பட்டது.

படுகாயமடைந்தவர்களில் மேஜர் புத்ததாஸவும் மற்றும் இருபடையினரும் அதிகாலைக்குள் இறந்து விட்டனர். இதையடுத்து முகாமின் மருத்துவப் பிரிவை எவ்வளவு பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற முடியுமோ அவ்வளவு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றினேம். இதனை மேற்கொள்ளுமாறு முகாம் தளபதி மேஜர் சனத் கருணரத்ன அவசர உத்தரவை பிறப்பித்திருந்தார்.

### கோவிலில் மருத்துவ பிரிவு

மருத்துவப்பிரிவுமுகாமினுள் பகுதியில் புதிதாக கட்டப்பட்டிருந்த கோவில் ஒன்றிற்கு மாற்றப்பட்டது. கோவிலின் கூரைப்பகுதி 'கொங்கிறீட்டினுல் கட்டப்பட்டிருந்தது. இதனல் மோட்டார் ரொக்கட் தாக்குதலிருந்து ஓரளவு தப்பக் கூடியதாயிருந்தது.

பூசகரின் அறையை (அதனுள் விக்கிரகங்களும் இருந்தன) பின்னர் பிரேத அறையாக மாற்றி அதனுள்ளேயே கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை போட்டோம்.

அடுத்த நாள் பகல் வேளை முழுவதும் புலிகள் தொடர்ச்சியாக தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தனர். படையினரும்திருப்பித்தாக்கிக்கொண்டிருந்தனர். குண்டுவீச்சு விமானங்கள், பொதிசுமக்கும் விமானங்கள், ஹெலிகொப்டர்கள்முகாமை சுற்றி உக்கிரமாக குண்டுத்தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தன. இதன்மூலம் புலிகள் முகாமை நோக்கி தாக்குவதை திசைதிருப்ப அவை முயன்றன.

### விமானங்களை நோக்கி தாக்குதல்

விமானங்கள் ஹெலிகள் வரும் போதெல்லாம் புலிகள் அவற்றை நோக்கி கடுமையாக தாக்குவார்கள் அவ்வேளை முகாம் நோக்கிய தாக்குதல் ஓரளவு குறைந்திருக்கும் விமானங்கள் மறைந்தபின் மீண்டும் முகாம் நோக்கி உக்கிர தாக்குதல் நடக்கும். இந்த நிலையில் எமக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டது.

[தொடரும்]

---

## மனம்கனிந் தருள்வாய் உமைபாலகனே!

ராகம்: சகாணு தாளம்: ஆதி

பல்லவி

மலரடி பணிந்தோம் மயில்வா கனனே!
மனம்கனிந் தருள்வாய் உமைபா லகனே!!
[மலர.........]

அனுபல்லவி

கல்லையும் கரைத்திடும் எம்துயர் பாராயோ?
நல்லையிலே வளரும் வள்ளலே கேளாயோ?
[மலர.........]

சரணம்

வெற்றிவே லெம்நிலையை மாற்றுவ தெந்நாளோ?
வல்லவே லெம்துயர்கள் போக்குவ தெந்நாளோ?
அருணவே லெம்நலங்கள் நாட்டிட லென்ருமோ?
கனகவே லெம்குலத்தைக் காத்திட லென்ருமோ?
[மலர.........]

O

வானவரின் தாழ்வைத் துடைத்ததும் நீதானே!
வானவரின் வாழ்வை அமைத்ததும் நீதானே!!
ஈனமிகு வாழ்வைத் துடைத்தருள் புரிவாயே!!
மானமுடன் வாழ்வை எமக்கருள் புரிவாயே!!
[மலர.........]

— சரவணன்

★ இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம்

---

## இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லூரில் யாழ். மாவட்ட திரிசாரணர்குழு தலைமைச் செயலகம் இன்று 15-ஆம் திகதி வியாழக்கிழமை காலை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சுனர்க்கினியரினல் திறந்து வைக்கப்படும்.

0 0 9

[பண்டத்தரிப்பு]

சில்லாலை புனித. கதிரை மாதா ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 6-ம் திகதியன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று 15-ம் திகதி வியாழக்கிழமை காலை திருப்பலி பூசை, திருச்சுருபபவனி ஆகியவற்றுடன் உற்சவம் நிறைவு பெறும்.

பூசைகளை சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. பொனிபாஸ் அடிகளார் நிறைவேற்றுவார். [72]

0 0 0

[வேலணை]

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று 15-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

---

## நல்லூர்க் கந்தன் இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

---

### மரணப்பொறி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரோந்துப்பணியில் ஈடுபட்ட படையினரின் பின்புறத்தில் வந்த புலிகள் 'மரணப் பொறிக்'குள் படையினரை சிக்கவைத்துக் கொன்றதாக இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

[சி-153]

---

### ஜனதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகளுக்கு விளம்பரம் ஒன்றைக் கொடுத்துள்ளார்

ஜனதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்குவதன் மூலம் பாராளுமன்றம் அதிகாரத்தை இழந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி-153)

---

### உதவி வழங்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளது.

இவ்வருடம் இலங்கைக்கு இந்நாடுகள் உதவி வழங்க மறுத்தையடுத்து இம்மாநாட்டை அடுத்தவருட முற்பகுதியில் நடாத்துமாறு இலங்கை அரசு இந்நாடுகளை கோரியுள்ளது.

எனினும் இது தொடர்பாக உதவி வழங்கும் நாடுகள் இது வரை பதிலெதனையும் கூறவில்லையாம். [சி]

---

### தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இது தொடர்பாக இவர்கள் கொழும்பு பத்திரிகைகள் மூலம் இந்த மத மாற்றத்தை விளம்பரப்படுத்தியுள்ளனர்.

(சி)

---

### யாழ்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் மாணவர் தொகை அதிகரிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

யாழ். பல்கலைக்கழகத்திற்கு மேற்படி கல்வியாண்டில் அனுமதிக்கப்பட மாணவர்களின் தொகை 818 ஆகும். இதே வேளையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் முழுமையாகப் பதிவுசெய்யப்படவில்லை.

சமகாலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு போக்குவரத்து, தபால் பிரச்சனைகளால் பதிவுகள் தாமதமாக இருந்தால்கூட அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் குறிப்பிட்ட தொகையினர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

தெரிவுசெய்யப்பட்ட பாடநெறிகளில் விருப்புக் குறைவும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

மாணவர்கள் பதிவுத் தொகைக்கு ஏற்ப பல்கலைக்கழக மானியத்தொகை கிடைப்பதால் மாணவர்கள் தொகை குறையும் இடத்து நிதி உதவிகளும் குறையலாம் என்று கூறப்படுகிறது. இதனல் யாழ் பல்கலைக்கழக வளர்ச்சி பாதிக்க இடமுண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[153]

---

## "சங்கிலியன் காலத்தில் இழந்த இறைமையை

# தலைவர் பிரபா காலத்தில் மீட்டெடுக்கப் போராடுகிறேம்"

[யாழ்ப்பாணம்]

"சங்கிலியன் காலத்தில் 1591 அக்டோபர் மாதம் 26ம் திகதி தமிழீழத்தின் இறைமையை இழந்தோம். அன்று இழந்ததை இன்று எமது தலைவர் வே.பிரபாகரன் காலத்தில் திரும்ப மீட்டெடுப்பதற்காக போராடுகின்ருேம். இந்த வரலாற்றுப்போரில ஆனையிறவில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் உலகத்தை உற்றுப்பார்க்க வைத்த பெரும் போராகும். விடுதலைப் புலிகள் உயிரை இழப்பார்கள் உடலின் அவயவங்களை இழப்பார்கள். ஆனல் மானத்தை இழக்கமாட்டார்கள் என்ற செய்தியை எதிரிக்கும் உலகத்திற்கும் உணர்த்திய போரே ஆனையிறவுப்போர்."

கலிகைச்சந்தியில் நடந்த போர்க்காலக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலை புலிகள் கலை பண்பாட்டு பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பேசுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; வீரர்களை முன்னேற விட்டு தளபதிகள் பின்னே நின்று போரிடும் படை மரபையே மீறி தளபதிகள் முன்னேற வீரர்கள் பின்னேயும் நின்று வீரம் விளைவிக்கும் மரபை புலிகள்வரித்துள்ளனர். இதனலே தான் தளபதிகளின் புகழுடம்புகள் கூட அஞ்சலிக்கு வைக்கமுடியவில்லை. தலைவர் பிரபாகரனின் காலத்தில் தமிழீழத்தை பெறுவது மட்டும்போதாது அவரது காலத்திலேயே உலகுக்கு வழிகாட்டக்கூடியதாக தமிழீழத்தை நிர்ணயிக்கவும் வேண்டும் என்ருர்.

இக்கூட்டத்தில் தினேஸ், ஆர்த்தி, கீர்த்தன ஆகியோரும் கருத்துரை வழங்கினர்கள்.

தமிழகத்தில்

# துப்பாக்கி கலாச்சாரம் ஏற்பட

## அ. தி. மு. க. - காங்கிரசே காரணம்

(சென்னை)

"தமிழகத்தில் தி.மு.க.தான் துப்பாக்கி கலாச்சாரத்தை ஏற்படுத்தியதாகக் கூறுபவர்கள் காங்கிரசும்; அ. தி. மு. க.வும்தான் முதலில் இலங்கை போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கினர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது''.

இவ்வாறு இந்திய முன்னாள் மத்திய அமைச்சரும், தி.மு.க. பிரமுகருமான திரு. முரசொலி மாறன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

1987ல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபின் வடக்கு-கிழக்கில் தமிழியக்கங்களுடன் இணைந்து இந்தியப் படைகள் நடாத்திய அட்டகாசம் பற்றி உலகிற்கே தெரியும்.

1988ல் ஈ. என். டி. எல். எப்., ஈ. பி- ஆர். எல். எவ். இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டது பகிரங்கமாக தெரிந்ததொரு விடயம். தற்போது இந்திய மத்திய அரசின் பாதுகாப்பில் வரதராஜப் பெருமாள் இருக்கிறுரென்றும் கூறினர். (சி)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம், சாவகச்சேரி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் உடனடியாக நீக்கப்பட்டதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிளிநொச்சிக் கிராமசேவையாளர் பிரிவு, கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய இடங்களில் உடனடியாக நீக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

# புலிகளுக்கு உதவி; ஒருவர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம், வெடிமருந்துகள் மற்றும் பல்வேறு வகையான பொருட்களை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடத்த உதவினுர் என்ற சந்தேகத்தின் பேரில் திரைப்பட நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்று நாமக்கல்லில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

திருச்சி உறையூரை சேர்ந்த இவர் ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் நெருக்கமான தொடர்புவைத்திருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர். (க)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, வடமராட்சி தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளருக்கும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களுக்கும், ஆசிரியர்களுக்கான விசேட பொதுக் கூட்டம், இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தென்மராட்சிக் கோட்டத்தினருக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு வடமராட்சிக் கோட்டத்தினருக்கு நெல்லியடி ம. ம. மகளிர் பாடசாலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

## இன்று மடு மாதா திருநாள்

(யாழ்ப்பாணம்)

இன்று மடு மாதாவின் திருநாள். இன்றைய இறுதி நாள் ஆராதனைகளில் கலந்துகொள்வதற்காக, யாழ். நகரிலிருந்து பெருந்தொகையான யாத்திரிகர்கள் மடுத் தேவாலயம் சென்றுள்ளனர். (வி)

## பரீட்சை பெறுபேறுகளை அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1990க்கான க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைப் பெறுபேறுகளையும், 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளையும் விரைவில் அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரி, பரீட்சை ஆணையாளரைக் கோரியுள்ளார்.

மேலும் ஆங்கில ஆசிரியர் பரீட்சை, தாதிமார் பரீட்சைகள் யாழ். மாவட்டத்தில் தடங்கலின்றி நடைபெறவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இவர் கேட்டுள்ளார். (152)

## வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரவேங்கை வின்சன் (முத்துராசா - சுரேஷ்குமார்- திருமலை] வீர மரணமடைந்தார். இதேவேளை நேற்று ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினரின் எதிர்பாராத துப்பாக்கிப் பிரயோகத்தால் வீரவேங்கை சாப்டீன் [சரவணமுத்து ராஜேந்திரன் கிளிநொச்சி] வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர், [வி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னின்று நடத்தியவர். சமீபத்தில் ஆனையிறவுத் தாக்குதலுக்குத் தலைமைதாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவிக்காலம் இம்மாதம் 17ந் திகதியுடன் முடிவடைவதால் அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள கிராம

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஊர்காவற்படையும் தொண்டர் படையும் அமைக்கப்பட்டுமுள்ளது. கடந்த வாரம் வெலிகந்தவில் இடம்பெற்ற தாக்குதலில் 3 இராணுவ அதிகாரிகள் உட்பட 23 படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## நாளை

[யாழ்ப்பாணம்]

போராளிகள் பராமரிப்பு தொடர்பாகபாலம் பணிமனையில இன்று நடைபெறவிருந்த கலந்துரையாடல் நாளைமாலை 4 மணிக்கு நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

[யசழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையின் ஆனிமாதத்திற்கான ஒய்வூதியக் கொடுப்பனவு இன்றும் நாளையும் பணமாக வழங்கப்படும்.

சகல அரச திணைக்கள, கூட்டுத்தாபன அதிகாரிகளையும் இன்று காலை 8-00 மணிக்கு காசோலையுடன் தவருது வங்கிக்குச் சமுகமளிக்குமாறு பிரதான முகாமையாளர் கேட்டுள்ளார்.


வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாஜம், யாழ்ப்பாணம்

## விசேட அறிவித்தல்

ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்னறிவித்தலின்றி நிவாரணத்தை நிறுத்தியுள்ளமையை கண்டித்து யாழ். செயலகத்தின் முன் நாளை நடைபெறும் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

16 - 8 - 91 வெள்ளிக்கிழமை

சகல சிகையலங்கார நிலையங்களும் பூட்டப்பட்டு சகல தொழிலாளர்களின் குடும்பங்களும்,

காலை 7-00 மணிக்கு

யாழ்ப்பாண செயலகம் முன்

எமது அமைப்பின் வலிமையை உணர்த்த அணிதிரளுமாறு பகிரங்கமாக வேண்டுகிறோம்.

சு. ஆனந்தராசா, செயலாளர் — அ. ஞானப்பிரகாசம், தலைவர்

[சி 5120]


## மேஜர்

(1ம பக்கத் தொடர்ச்சி)

மேஜர் உடுகம்பொலவும், லெப்டினன்ட் விக்கிரமாராய்ச்சியும் இவர் காதலியும் 80லட்சம் ரூபா பெறுமதியான தங்கப்பாளங்களையும், தங்க முலாம் பூசிய 3000 கைக்கடிகாரங்களையும் இலங்கைக்குக் கடத்தியபோது பிடிபட்டனர்

இவர்களுக்கு தலா 2 கோடி ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. எனினும் இதனைச் செலுத்தத் தவறியதையடுத்து மேஜர் உடுகம்பொல பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோசினில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/186386/83

இன்று முதல்

# ஒய்வூதிய பணத்தை வங்கிகள் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் வங்கிகளுக்கு கப்பலில் பணம் வந்துள்ளதையடுத்து, ஒய்வூதியம் பெறுவோருக்கான பணம் இன்று காலை முதல் இலங்கை வங்கி உட்பட சகல வங்கிகளுக்கும் வழங்கப்படுமென வங்கி அதிகாரிகள் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தனர்.

இதேவேளை ஜூன் மாத ஒய்வூதிய கொடுப்பனவுக்கான கட்டுநிதியும் வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் மொத்தம் மூன்று கோடியே ஐம்பது லட்சம் ரூபா ஒய்வூதியமாக வழங்கப்படுவதாகத் தெரிவித்த அவர், ஒய்வூதியம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி கிராமிய வங்கியூடாக வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். (ச)

# உணவு முத்திரையில் பெரும் மோசடி

(யாழ்ப்பாணம்)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவுக் கிளையில், பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரையில் பெரும் மோசடி செய்யப்பட்டுள்ளது தற்போது கண்டுபிக்கப்பட்டுள்ளது.

மற்றைய கிளைகளில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பொருட்களை, மண்டைதீவுக் கிளை இரட்டிப்பு விலைகளுக்கு வழங்கி வருவதாகவும், இதனுல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி மோசடி வேலை, யாழ். செயலக அதிகாரிகளின் கவனத்திற்குத் தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ளது (வி)

# மாதவராவ் சிந்தியா தாக்கப்பட்டார்

[புதுடில்லி]

இந்திய மத்திய சிவில் விமானபோக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியாவை பாரதீய ஜனதா கட்சித்தொண்டர்கள் 150பேர் நேற்றுக்காலை புதுடில்லிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தாக்கியுள்ளனர்.

திரு. மாதவராவ் சிந்தியாவின் வீட்டில் பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் வேறுபலரும் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று லோகசபாவிற்குள் புகுந்த இந்திரா காங்கிரஸ் கட்சி லோகசபா உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை இடைநிறுத்தியதாகவும் பல தடவைகள் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக்கட்சி தலைவரைக் கண்டித்து கடந்த வாரம் திரு. மாதவராவ் சிந்தியா உரையாற்றியதைத் தொடர்ந்து இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது [க]

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இவர்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். இச்சந்திப்பில் சிலமேற்கு நாட்டு தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

சுமார் 1 மணிநேரம் இப்பேச்சுக்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அமெரிக்க தூதர் மீண்டுமொருமுறை அரச தரப்பினரை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## மரண அறிவித்தல்

### திரு. முருகேசு தாமோதரம்பிள்ளை

[ஓய்வுபெற்ற மலாயன் பென்சனியர்)

[சுழிபுரம்)

யாழ். காளுவன் சுழிபுரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மலாயன் பென்சனியர் திரு. முருகேசு தாமோதரம்பிள்ளையவர்கள் 14 - 08 - 91 அன்று காலை 9-45 மணிக்கு காலமானுர் அன்னர் காலஞ்சென்ற முருகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி தேவராசா கமலாதேவி [மலேசியா] திருமதி நடராஜலிங்கம் பத்மாதேவி, திரு. விக்கினேசு, திரு. ரத்னவேல் [U. K.] அவர்களின் அன்புத் தந்தையாரும், திரு. தேவராசா [மலேசியா] திரு. நடராஜலிங்கம், திருமதி சரோஜினிதேவி, திருமதி இன்பவதி ஆகியோரின் அன்பு மாமனுரும், ஜெயந்தி (கணக்காளர் மலேசியா] சுகந்தி (M. B. B. S.) (மலேசியா) வசந்தி (M B. B. S. மலேசியா) மாலதி [வைத்திய பீடம் இறுதியாண்டு மலேசியா] சிவசங்கர் (மாணவன் மலேசியா) ரூபகுமார் [சுவிஸ்] முரளிதரன், சக்திதாசன், சுதர்ஜினி, கமலஹாசன், நந்தலோஜினி. அனுசீத்த (மாணவி U.K.) ஆகியோரின் அன்புப் பேரனுரும். காலஞ்சென்ற முருகேசு, மாரிமுத்து. வியாளாச்சி சிற்றம்பலம், சதாசிவம் தெய்வானைப்பிள்ளை [மலேசியா] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னரது ஈமக்கிரியைகள் (15 - 08 - 91) இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 - 00 மணிக்கு காளுவன் சுளிபுரம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பொன்னாலை சுழிபுரம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: தா. விக்கினேஸ்

சுழிபுரம். (சி-5118)